DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 349/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : திரு. சசிகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03 June 2026.

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலர் பணிபுரிந்த மருதுபாண்டியன் மற்றும் உதவி ஆய்வாளர் வேல்பாண்டியன் ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.02.2024-ம் தேதி 13.00 மணிக்கு முதல்நிலைக்காவலர் மருதுபாண்டியன் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில்

கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முத்துகுமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.33/2024 இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(ii) IPC–ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் வேல்பாண்டியன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வரலட்சுமி, வீரலட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் முத்துகுமார், முருகேஸ்வரி, சித்ரா, வரலட்சுமி, வீரலட்சுமி, சந்திரன், பெரியசாமி, மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த முதல்நிலைக்காவலர் முருதபாண்டியன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். காயம்பட்ட சாட்சியான முத்துகுமார் என்பவருக்கு சிகிக்சை அளித்த சங்கரன்கோவில் அரசுமருத்துவமனை மருத்துவர் விஷ்வநாத் பிரதாப்சிங் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். **அ.சா.1** முத்துகுமார் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என சான்று வழங்கியுள்ளார். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. **அ.சா.2** முருகேஸ்வரி என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என சான்று வழங்கியுள்ளார். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகள் மாண்பமை மதுரை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்றுள்ளார்கள். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 27.12.2024–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(ii) IPC–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.